26.03.2026

O.S.No. 176/2024

DW2- அனந்தபெருமாள்– த/பெ. ஆறுமுகநயினார் நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.03.2026

குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில்)

1. நான் நிரந்தரமாக செல்லபிள்ளையார்குளம் கிராமத்தில் இருந்தேன் என்றால் பிறந்தது செல்லபிள்ளையார்குளம் பின்பு அனந்தபெருமாள்நாடானூர் ஊரில் குடியேறினேன்.

2. நான் அனந்தபெருமாள்நாடானூரில் வசிக்கிறேன்என்பதற்கு ஆவணம் எதுவும் என் கைவசம் இல்லை எனவும் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் கரூரில் தனியார் மில்–க்கு வேலைக்கு ஆட்கள் அனுப்பு மேஸ்திரியாக பணிபுரிந்தேன் என்றால் சரிதான்.

4. நான் கரூரில் எத்தனை வருடங்கள் குடியிருந்தேன் என்றால் தினசரி கரூர் சென்று வருவேன். எத்தனை வருடமாக நான் வேலைக்கு ஆட்களை அனுப்பிவைத்தேன் என்றால் 6 வருடமாக வேலை செய்தேன்.

5. என் மீது கடையம் காவல் நிலையத்தில் HS பதிவு உள்ளது என்றால் இல்லை.

6. வழக்கு சொத்திற்கும் எனக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல பக்கத்தில் இடம் உள்ளது.

7. வழக்கு சொத்தின் சர்வே எண் அருகில் எனக்கு இடம் உள்ளது.

8. எனக்கு அனந்தபெருமாள்நாடானூர் கிராமத்தில் சர்வே எண்.86 ல் ½ ஏக்கர் இடம் உள்ளது. அந்த இடத்தை முப்புடாதி நாடாரிடம் நான் கிரையம் பெற்றேன். அந்த கிரைய ஆவணம் என் கைவசம் உள்ளது.

9. 1ம் பிரதிவாதி பரமசிவம் சொல்லி தான் எனக்கு வழக்கு விவரம் தெரியும் என்றால் சரியல்ல.

10. பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை.

11. வாதிகள் எனக்கு உறவுமுறை இல்லை என்றால் சரிதான்.

12. முதல் விசாரணை வாக்குமூலம் யார் தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் என் தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டது.

13. முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் குறித்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூறினார்களா என்றால் இல்லை.

14. தபசில் சொத்து மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பொறுத்து ஆவணம் ஏதேனும் நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை.

15. ஆவணங்களை பார்வையிடாமல் உத்தேசமாக சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல எனக்கு பக்கத்தில் இடம் உள்ளது.

16. எத்தனை ஏக்கர் சம்மந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17. 2 ஏக்கர் நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.87/1ல் உள்ளது.

18. சர்வே எண்.87/1ற்கு கீழ்புறம், வடபுறம், மேல்புறம், தென்புறம் என்ன சர்வே எண் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சர்வே எண்.87/1ற்கு வடபுறம் கோழிப்பண்ணை உள்ளது யார் வைத்துள்ளார் என்று தெரியாது. தென்புறம் யார் இடம் உள்ளது என தெரியாது. மேல்புறம் ஓடை உள்ளது. கீழ்புறம் ரோடு உள்ளது.

19. சொத்து விவர எல்கை மால் தவறாக குறிப்பிட்டு பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பரமசிவம் எனது தூரத்து உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

20. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றும் பரமசிவம் ஏற்பாட்டில் தயார் செய்யப்பட்டது என்றும் முதல் விசாரணையில் கண்ட படி எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
தென்காசி